**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**A051 மொழிவரலாறு – 1**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. உலக மொழியில் உள்ள எழுத்து முறைகளை எழுதுக?
2. சோழர் கல்வெட்டுகளில் வடசொற்கள் எங்ஙனம் எழுதப்பட்டுள்ளன?
3. இந்திய மொழிகளின் மூன்று பிரிவுகளை எழுதுக?
4. ஒலியியல் என்றால் என்ன?
5. தமிழ் நாட்டில் குகைக்கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் மூன்றினை எழுதுக?
6. எல்லா உயிர் எழுத்தோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துகளைக் குறிப்பிடுக.
7. வினைச்சொல்லின் வகைகள் யாவை?
8. கிளவியாக்கம் என்ற தொடரின் பொருள் யாது?
9. திருவாய்மொழியின் ஆசிரியர் யார்?
10. முதலாழ்வார் மூவரைக் குறிப்பிடுக.
11. சோழர் காலத்து இலக்கண நூல்கள் யாவை?

12. நாயக்கர் காலத் தன்மை ஒருமை விகுதிகள் யாவை?

13. பதினெட்டு வகையான எழுத்துகளின் பெயர் பட்டியல் இடம் பெற்றுள்ள நூல் யாது?

14. திராவிட மொழியியலின் தந்தை யார்?

15. தமிழில் ஏட்டில் எழுதப்பட்ட முதல் உரை எது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. தனிமொழி – குறிப்பு வரைக?
2. வகை ஒலி என்றால் என்ன?
3. குகைக்கல்வெட்டுகளின் மொழி குறித்து எழுதுக?
4. முற்றும்மை என்பது யாது?
5. சோழர்காலத்து இலக்கியங்களைக் குறிப்பிடுக.
6. பெயர்ப் பதிலிகள் என்பதை விளக்குக.
7. தற்காலத்தில் காணப்பெறும் கிளைமொழியின் வகைகளைக் குறிப்பிடுக.
8. ஓரினமாதல் என்றால் என்ன? சான்று தருக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தென் திராவிட மொழிகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் காலத் தமிழ் ஒலிகளின் பாகுபாடுகளைத் தொகுத்தெழுதுக.

2. (அ) தொடர்வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பல்லவர் கால பெயரியல் மாற்றங்களை விளக்கி வரைக.

3. (அ) நாயக்கர் கால ஒலி மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உரையாசிரியர் கால உரைநடை வளர்ச்சியினை விளக்குக.

***